Registered as ... ws Paper
பக்கங்கள் 04
விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி
நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 30 (12 - 05 - 1992) செவ்வாய்க்கிழமை ஓசை: 84

## தலைவர் பிரபாகரனுக்கு தமிழீழ கலைஞர் நன்றி

இன விடுதலையையும் கலை வளர்ச்சியையும் இரு கண்களாக மதித்து நல்லூரில் நடைபெற்ற இசைப் பெரு விழாவுக்கு தமது ஆசியையும் பேராதரவையும் நல்கிய தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்திற்கும் நன்றி தெரிவித்து தமிழீழக் கலைஞர்கள் சார்பில் பொன். சுந்தரலிங்கம் அவர்களும் எஸ். பத்மலிங்கம் அவர்களும் செய்தி வெளியிட்டுள்ளனர். அச் செய்தியில் போர்க்கால சூழ் நிலையிலும் கர்நாடக இசையின் பால் மக்களுக்கு ஓர் ஈடுபாட்டை ஏற்படுத்தக் கூடிய வகையில் நல்லூரில் முன் எப்போதும் இல்லாதவாறு மழையையும் பொருட்படுத்தாது வெள்ளம்போல் தமிழர் கூடியிருந்து ரசிக்கவும் தக்க ஓர்

(4ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் தடை விவகாரம்

# இந்திய அரசு எதிர்கொள்ளும் சிக்கல்

# அமைச்சுக்கள் மத்தியில் முரண்பாடு

(டில்லி)

விடுதலைப் புலிகளை தடைசெய்யும் விவகாரத்தில் இந்திய மத்திய அமைச்சுகள் மத்தியிலும் இந்திய புலனாய்வுத் துறைகளுக்கு இடையிலும் பலத்த முரண்பாடு எழுந்துள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சும், இந்திய வெளிவிவகார புலனாய்வுத்துறையான 'றோ' வும் புலிகளை தடைசெய்வது இந்திய நலனுக்கு பாதகமானது எனக் கருதுகின்றன. ஆனால் அதேவேளை உள்துறை அமைச்சும் இந்திய உள்நாட்டு புலனாய்வுத் துறையான ஐ. பி. யும் விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டுமென வற்புறுத்துகின்றன இதனால் புலிகளைத் தடைசெய்யும விவகாரத்தில் இழுபறி நிலவுகின்றது.

விடுதலைப்புலிகளைத்தடை செய்வதால், இலங்கை - இந்திய விவகாரத்தில் இந்தியாவின் செல்வாக்குப் பெரிதும் பாதிக்கப்படலாமென இந்திய வெளிவிவகார அமைச்சு கருதுகின்றது. இந்திய வெளிவிவகாரச் செயலாளர் திரு. ஜே. என். டிக்ஸிற் அண்மையில் இந்தியப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் ''புலிகளைத் தடைசெய்வதால் இந்தியாவின் நீண்ட கால நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடாது'' என்று குறிப்பிட்டார்.

பிரேமதாசா அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்துவதற்கு முயற்சிகளை] எடுத்து வரும் இந்தச் சூழ்நிலையில், இந்திய அரசு புலிகளைத்தடைசெய்யுமானால் இலங்கை மீதான பிடியை இந்தியா இழந்துவிட நேரிடும் என இந்தப் பேட்டியில் டிக்ஸிற் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதே கருத்தையே இந்திய வெளிவிவகாரப் புலனாய்வு

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விசுவாசிகளை கட்டுப்படுத்த வேண்டும்

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு விசுவாசமான அல்லது உடந்தையான மற்றைய அமைப்புகளைப் பொறுத்த மட்டில் அவற்றின் நடவடிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களுக்கு மன உறுதியூட்டிய பெருந்தகை யாழ். ஆயர்

- பேராசிரியர் துரைராசா

அரசாங்கப் படைகள் மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டு வீசித்தாக்கி மக்களின் மனநிலையை பாதிப்படையச் செய்வதன் மூலம் அவர்களை நாட்டில் இருந்து வெளியேற்ற முயற்சித்தசமயம் அசையாத ஆத்மபலத்துடனும் உறுதியுடனும் இந்த மண்ணிலேயே தங்கி நின்று, யாழ். மக்களுக்கு மன உறுதியையும், தன்னம்பிக்கையையும் ஊட்டியவர் ஆயர்வண தியோகுப்பிள்ளை. இவ்வாறு நேற்று யாழ். பேராலய மைதானத்தில் நடைபெற்ற ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்களின் வெள்ளி, பொன், பவள விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ் பல்கலைக் கழகதுணைவேந்தர்திரு. துரைராசா தெரிவித்தார்.

அவர்மேலும் உரையாற்றுகையில், ஆயரின் சேவை தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் தேவை என்று கூறினார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச்சேர்ந்த திரு. யோகி அவர்கள் உரையாற்றும் போது,

நீண்ட காலமாக தமிழ் மக்கள் சந்தித்து வரும் அழிவுகளையும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் உலக அரங்கிற்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 22 காவல் அரண்கள் தகர்ப்பு

## ஆயருக்கு முப்பெரும் விழா பேராலயத்தில் ஜனத்திரள்

மேதகு யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் முப்பெரும் விழா மிகச்சிறப்பாக நேற்று நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட

மணி ஒலிக்க குருப்பிரசாதிகள், ஆயர்கள் வரிசையாக முன்னே செல்ல, ஆயர் முடி சூடி கையில் செங்கோலேந்தி பவனியாக பேராலயத்திற்கு நன்றித் திருப்பலி ஒப்புக்

# 15 ராணுவம் பலி: பலர் காயம்

ஆனையிறவு-தட்டுவன் கொட்டிப் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் தொடர் காவலரண்கள்மீது விடுதலைப்புலிகள்நேற்று அதிகாலை துணிகர அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். முப்பது நிமிடங்கள் நடைபெற்றஇத் தாக்குதலில் இராணுவத்தினரின் 22 காவலரண்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. பதினைந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். காயமடைந்த இராணுவத்தினர் முகாம்களுக்கு ஓடிவிட்டனர். பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன, அத்துடன் மூன்று இராணுவ சடலங்களும் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

இம் மோதலில், இரு புலிகள் வீரச் சாவைத் தழுவிக் கொண்டனர்.

## சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி தாக்குதல் பிரிவு சாதனை

(கிளிநொச்சி)

ஆனையிறவு தட்டுவன் கொட்டித் தொடர் காவலரண்கள்மீது நேற்றுஅதிகாலை மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலைச் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும், கிளிநொச்சி மாவட்டத் தாக்குதற் பிரிவும் இணைந்து மேற்கொண்டன.

சிறிலங்கா இராணுவத்தின் தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் இதுவரை மேற்கொண்ட தாக்குதல்களில் இதுவே பெரிதெனத் தெரிவிக்கப்படுகின்றது. இத் தாக்குதலின்போது இராணுவத்தினரின் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகளால் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை கடந்த வருடம் ஆனையிறவு இராணுவ முகாமின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பெரும் தாக்குதலுக்குப் பின்னர் ஆனையிறவு முகாமின் காவலரண்கள் மீது புலிகள் மேற்கொண்ட பெரிய தாக்குதல் இதுவாகும்.

## 2 வேங்கைகள் வீரச்சாவு

ஆனையிறவு முகாமில் இருக்கும் இராணுவத்தினரி தட்டுவான் கொட்டிப் பகுதியில் அமைந்திருந்த தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் அதிரடித் தாக்குதலில் 2ஆம் லெப்டினன்ட் சலீம் (சாந்தன், கந்தையா பாலசுப்பிரமணியம் 1ஆம் யூனிற் இருவையாறு கிளிநொச்சி), லெப்டினன்ட் லக்சன் (ரவிசங்கர், மகாலிங்கம் கௌரி முகுந்தன் 6ஆம் வட்டாரம் சாம்பல்தீவு, திருமலை) ஆகிய விடுதலைப்புலி வீரர்கள் இருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.



2ஆம் லெப் சலீம்



லெப்டினன்ட் லக்சன்

## ஆர்.பி.ஜி., எல்.எம்.ஜி.கள் உட்பட பெருந்தொகை ஆயுதங்கள் மீட்பு

தட்டுவன்கொட்டி தொடர் காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது இரண்டு ஆர் பி. ஜி. இரண்டு எல். எம். ஜி உட்பட பெருமளவு ஆயுதங்களும் வெடிபொருள்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

★ ஏ. கே. எல். எம். ஜி -02
★ ஆர். பி. ஜி -02
★ அதற்குரிய ஷெல் -13
★ புறப்பளர் -08
★ ரி- 56 - 02 -03
★ ரி- 56 புதுமொடல் -02
★ ரி- 56 பழையமொடல் -01
★ ரி- 56 - 1 -02
★ 40 எம்.எம். பிஸ்டல் -01
★ அதற்குரிய ஷெல்கள் -14
★ சிக்னல் டிஸ்ரன் -01
★ ஜே ஆர்ரசைக்குண்டு -26
★ ரி-81றைபிள்கிரனைட் -01
★ தொலைநோக்கி -01
★ நச்சுவாயுதடைகருவி -05
★ றம் மகசீன் -15
★ ரி - 56 மகசீன் -22
★ ரி - 81 மகசீன் -13
★ ஜி -3 மகசீன் -01
★ 60 எம் எம்.பராஷெல்-04
★ 60 எம். எம். ஷெல் -14
★ 60 ,, ஷெல் காட் றச்-09
★ 60 எம். எம். பூஸ்டர் -20
★ பயனைட் கத்தி -02
★ ஏ. கே. கோல்சர் -05
★ ஏ. கே எல். எம். ஜி. கோல்சர் - 12
★ ஐ. எம். ரவைகள் -15949
★ நேட்டோ ரவைகள் - 603
★ லிங்குகள் - 2039
★ சப்பாத்து - 46 சோடி
★ தண்ணீர் கான் - 14
★ கோல்சர் - 28
★ பெல்ட் - 14
★ தொப்பி - 06
★ றெயின்கோட் - 13
★ புல்லட்புறூவ் ஜக்கெட்-03
★ ஹெல்மட் -10
★ கிற்பாக் -25
★ வெடிவைக்கும் கருவி - 02

பெற்றது.

பால்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட ஜனசமுத்திரத்தின் மத்தியில் ஆண்டகையின் வெள்ளி-பொன்-பவள விழா நேற்று மாலை நான்கு மணிக்கு ஆரம்பமானது. ஆயர், ஆயர் இல்லத்திலிருந்து சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டார். அங்கிருந்து பேராலய காண்டா பவனியாக பேராலயத்திற்கு நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்க அழைத்துச் செல்லப்பட்டார்.

அடுத்து ஆலய முன்றலில் வைத்து அருட்திரு எஸ்.ஏ. மைக்கல்சாமி அவர்கள் ஆயருக்கு மலர் மாலை அணிவித்தார். இதனைத் தொடர்ந்து அவர்நாதஸ்வர இசைமுழங்க மேடைக்கு அழைத்துவரப்

[4ஆம் பக்கம் பார்க்க]

## பாராளுமன்ற தெரிவுக் குழு

## தீர்வைத் தரத் தவறினால் நான் யாழ். செல்வேன் -தொண்டா

பாராளுமன்றத் தெரிவுக் குழு இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கத் தவறினால் தான் யாழ். சென்று சமாதான முயற்சியில் ஈடுபடப் போவதாக இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தான்யாழ்ப்பாணம்செல்வதை எவராலும் தடுக்க முடியாது என்று குறிப்பிட்டார்.

இவ்வாறு குறிப்பிடுவதன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## க.பொ.த. (சாதாரணதரம்) சங்கீத பரீட்சை விரைவில்

க. பொ. த. சாதாரணதர பரீட்சார்த்திகளுக்கான சங்கீதபாட செய்முறைப் பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது. 1990 டிசம்பரில் பாடசாலைகளுடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகவும் தோற்றியவர்களுக்கும் 1991 டிசம்பரில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்றியோருக்குமே இச்சங்கீத செய்முறைப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை வினாத்தாள்கள் யாழ். கல்வித்திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இச் செய்முறைப் பரீட்சையை விரைவில் நடாத்துவதற்கான ஒழுங்குகளை யாழ். கல்வித்திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. (ச)

## ஆனையிறவு இராணுவம் எறிகணை வீச்சு

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்று இயக்கச்சி, ஊரியான், கோயில் வயல், சங்கத்தார் வயல், தட்டுவான் கொட்டி ஆகிய பகுதிகளை நோக்கித் தொடர்ச்சியான ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை தொடர்ச்சியாக பல மணிநேரம் இத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதல்களின்போது பல எறிகணைகள் பொது மக்களின் குடியிருப்புக்களிடையே வீழ்ந்துவெடித்தன. எனினும் பெரியளவிலான சேதம் எதுவும் ஏற்பட்டதாக தகவல்கள் கிடைக்கவில்லை. குடியிருப்புப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினர்.

## வரி விளம்பரம்

### சங்கீதம் வினாவிடை

சங்கீதம் வினாவிடை தயாரிப்பு ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்த சர்மா 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம் ஆண்டுகளிலும் வட இலங்கைச் சங்கீத சபையின் 2 ஆம் தரம் பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியது. நடுவுத் துருத்தி நல்லூர்ச் சந்தை வெளியீடு: கிடைக்குமிடம் ஸ்ரீ காந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (6250)

### மன்னாருக்கு அம்புலன்ஸ்

யுனிசெப் நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட அம்புலன்ஸ் வண்டியொன்று மன்னார் வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் யுனிசெப் நிறுவனம் பத்து அம்புலன்ஸ் வண்டிகளை அன்பளிப்பு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
இலங்கை

### கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1991/92 கல்வியாண்டிற்கு பின்வரும் கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடம் இருந்து 1992 யூன் 6 ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கைநெறி
2. கலை முதற் கற்கைநெறி
3. பொதுக் கலைமாணி பகுதி 1
4. சிறப்புக் கலைமாணி பகுதி 1
5. வர்த்தகமாணி பகுதி 1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக்கலைமாணி கற்கைநெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம். (இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யி

# "அதிகாரத்தில் இருக்கும் பெண்கள் தலைமைத்துவத்தின் இரகசியம்"

'அமெரிக்காவை ஆள ஒரு பெண் ஜனாதிபதி உருவாகும் காலம் வெகு தூரத்தில் இல்லை. ஒரு பெண் ஜனாதிபதியாக வருவதென்பது நினைத்துக் கூட பார்க்க இயலாத ஒன்று என்றாலும் வெகு விரைவில் ஒரு பெண் ஜனாதிபதியை அமெரிக்கா நிச்சயம் காணத்தான் போகின்றது.

அரசியலில் பெண்களின் பங்கு குறித்து ஆராய்ந்து வரும் உளவியலாளர்களான டொரதி கண்டர், டோனி பேர்னே ஆகியோர் இது பற்றிய தமது அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளனர்.

'அதிகாரத்தில் இருக்கும் பெண்கள் தலைமைத்துவத்தின் இரகசியம்' என்ற ஒரு நூல் ஹோட்டன் பிப்லினில் வெளிவர இருக்கிறது.

இந்த நூலுக்காக 17 நாடுகளைச் சேர்ந்த 25 பெண் அரசியல் வாதிகளை பேட்டி கண்டுள்ள இந்த உளவியலாளர்கள் சுய நம்பிக்கை இருந்தால் பெண்களும் அரசியலில் பிரவேசிக்கலாம் எனக் கூறுகின்றனர்.

உளவியல் ஆய்வுகளுடன் அரசியலையும் கலந்து இந்த நூலைப் படைப்பதில் அயரா ஆர்வம் காட்டுகின்றனர். ஜனாதிபதி தேர்தல் வேளையில் நூலை முடித்து அரப்பணிக்க வேண்டும் என்பதே இந்த இருவரினதும் ஆர்வமாகும்.

சிறுவயதில் உறுதியுடன் அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்ளும் விதத்தில் பெண் குழந்தைகள் வளர்க்கப்பட வேண்டும். அப்படி வளர்க்கப்படாத பெண்களுக்கு பயிற்சி வழங்கவும் தயாராகவுள்ளனர். அரசியலில் நாட்டமுள்ள பெண்களை மட்டுமல்ல பொதுவாக எல்லாப் பெண்களையும் ஊக்குவிக்கவே தாம் விரும்புவதாக தெரிவித்துள்ளனர்.

ஒரு நாட்டை ஆளும் திறனுடன் கூடிய சக்தி மிக்க பெண்கள் உருவாக ஆலோசனை வைத்திருப்பதாக டொரதியும் டோனியும் கூறுகின்றனர்.

செனட்டர்கள் முதல் காங்கிரஸ் பெண்கள் முதல் ஆளுநர்கள் முதல் மேயர்கள் வரை எண்ணற்றோரை நாம் பேட்டி கண்டோம். இவர்கள் எல்லோரும் திட நம்பிக்கையுடன் வளர்க்கப்பட்டுள்ளனர் என்பதை தெரிந்து கொள்ள முடிந்தது. இது அவர்கள் நினைத்ததைச் சாதிக்க உதவும் என்பதில் ஐயமில்லை.

சகோதர சகோதரிகளுடன் பிறந்த பலர் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதால் ஆதிக்கம் மிக்கவர்களாக எதிர்த்துப் போராடும் தன்மை மிக்கவர்களாக வளர்ந்திருப்பதை எம்மால் காண முடிந்தது.

அச்சுறுத்தல்களுக்கு அஞ்சிப் பின்வாங்காமல் ஆதிக்கத்துடன் பெண்கள் செயல்பட முயல வேண்டும் என டொரதி கூறுகிறார் ஆயினும் அவ்வாறு ஆதிக்கம் செலுத்துவது கணவன் மனைவி உறவைப் பாதிக்காமல் இருத்தல் வேண்டும் என டோனி கூறுகிறார். ஆதிக்க உணர்வு ஒரு மனிதனை ஒருபோது அழித்துவிட மாட்டாது இலக்குகளை அடைவதற்கு ஒரு உந்துதல் இதன் மூலம் கிடைக்கின்றது.

ஆதிக்க உணர்வு மிகுந்தவர்கள் நிச்சயம் உயர்ச்சி அடைவார்கள். பெண்கள் என்றும் இரண்டு இலட்சியங்களுடனேயே வாழ்கின்றனர். திருமணம் செய்து தாயாக வேண்டும் என்பதும், தொழில்செய்து அதன்மூலம் முன்னேறிப் புகழடைய வேண்டுமென்பதே இந்த இரண்டு இலட்சியங்களாகும்.

இந்த இரண்டு இலட்சியங்களுக்குமிடையே எப்போதும் பெரும் போராட்டமே நிலவுகிறது.

இந்த ஆண்டில் அதிகளவு பெண்கள் அரசியலில் பிரவேசிக்கின்றனர்.

அமெரிக்க உதவி ஜனாதிபதித் தேர்தலுக்கு போட்டியிட்ட வேட்பாளர்களில் முதல் பெண் வேட்பாளராக விளங்கிய ஜெரல்டின் பெராரோ செனட் சபை ஆசனமொன்றுக்காக இப்போது பிரசாரப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை பிரிட்டிஷ் பாராளுமன்றம் அதன் சரித்திரத்தில் முதல் தடவையாக பெண்மணியொருவரை சபாநாயகராக அண்மையில் தெரிவு செய்திருக்கிறது.

எதிர்க்கட்சியான தொழிற் கட்சியின் வலதுசாரி அணியைச் சேர்ந்தவரான பெட்டி பூத்ரோயிட் (வயது 62) என்பவரே சபாநாயகராகத் தெரிவாகியுள்ளார்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான கொமன்ஸ் சபை பூத்ரோயிட்டை தெரிவு செய்தது.

600 வருடங்களுக்கு அதிகமான காலத்துக்கு முன்னர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சபாநாயகர் பதவி உருவாக்கப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக அந்தப் பதவியை அலங்கரிக்கும் பெண் என்ற பெருமை பூத்ரோயிட்டுக்கு கிடைத்துள்ளது. இவர் ஏற்கனவே ஐந்து வருடங்கள் பிரதி சபாநாயகராக பதவி வகித்துள்ளார்.

## முல்லைத்தீவு இலங்கைவங்கி கிளிநொச்சியில் இயங்குகிறது

மாங்குளம்

முல்லைத்தீவு இலங்கைவங்கி அலுவலகம் கிளிநொச்சியில் இயங்க வைக்கப்படவுள்ளதாக செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டுவருடங்களாக செயலிழந்து வரும் இவ்வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்கள் தமது பணத்தை பெறவோ வைப்பிலிடவோ முடியாதிருப்பதாகவும் மக்கள் புகாரிட்டு வருவதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (82)

## நினைவு கூருகின்றோம்...

### 1992-05-12

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை வெருகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**லெப். இளங்கோ** (இத்தூஸ்பிள்ளை மேரிதாசன் - லிங்கநகர், திருக்கோணமலை)

முல்லைத்தீவு, முத்தையன்கட்டுப் பகுதியில் சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**சுதன்** (அ சுந்தரராசா -புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விதமாகக் குண்டு வெடித்ததில் எம்மைப் பிரிந்த -

**ராம்** (சாணைக்குட்டி தனபாலசிங்கம் - மாவிட்டபுரம்)

1987 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, நாசிவன்தீவில் தேசவிரோத சக்தி ஒளினால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட

**சாபீர்|சாலி** (சரிபுதீன் முகமட்சபீர் - மட்டக்களப்பு)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய -

★ **வைரமுத்து** (தங்கத்துரை - எல்.பி-03, மூதூர், திருக்கோணமலை)

1988 ஆம் ஆண்டு உரும்பராயில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2ஆம் லெப். சின்னக்காந்தி** (இராசையா உதயபாலன் - உரும்பராய் கிழக்கு)

1989 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**பிரான்சிஸ்** (சூசைபிரான்சிஸ்-தங்கவேலாயுதபுரம் அம்பாறை)

இரணைமடுப் பகுதியில், இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட விவசாய ஆராய்ச்சி நிலைய ஊழியர்.

1991 ஆம் ஆண்டு வவுனியா / கோழியாகுளம், மாதர் பணிக்கர் குளம், மகிழங்குளம், நம்பைக்குளம், பூவரசங்குளம் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நிகழ்ந்த மோதல்களில் வீரச்சாவெய்திய

**அன்பன்** (நடராஜா தவசீலன் - வாகனேரி மட்டக்களப்பு)

**சிவசங்கர்** (நேசராசா உதயசங்கர்-தும்பன்கேணி மட்டக்களப்பு)

**லெப். கஸ்ரோ** (இராசப்பு விமலநாதன் - இருதயபுரம், மூதூர், திருக்கோணமலை)

**2ஆம் லெப். றிச்சாட்** (சித்திரவேல் நாகேந்திரன் - சகாயபுரம், மூதூர், திருக்கோணமலை

**2ஆம் லெப். கீதன்** (சுந்தரலிங்கம் விமலச்சந்திரன் - செம்மலை, மணலாறு)

**2ஆம் லெப். வியாசன்** (காராளசிங்கம் விக்கினேஸ்வரன் - பெரியகுளம், நெடுங்கேணி, மணலாறு)

## உப்புக் கூட்டுத்தாபனம் மக்கள்மயமாக்கப்பட்டது

இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் 'லங்கா சோல்ட் லிமிடெட்' என மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு இணங்கவும் வடபிராந்தியத்தில் உள்ள ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்கள் 1990 ஆடிமுதல் இயங்காமல் இருப்பதாலும் உடனடியாக அவற்றை இயங்கவைக்கும் சாத்தியங்கள் இல்லாமையாலும் 1992 ஜனவரி முதல் சம்பளங்கள் வழங்குவதில் தடங்கல்கள் இருப்பதாலும் வடபிராந்தியத்தில் உள்ள ஊழியர்கள் புலுமுல்ல அறிக்கையின் பிரகாரம் சுய விருப்பத்தின் அடிப்படையில் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளலாம் என தலைமை அலுவலகத்தில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு வடபிராந்திய ஊழியர்களையும் தொழிற்சங்க பிரதிநிதிகளையும் 19-05-92 பனை' 20-05-92 முரசுமோட்டை

## காணாமல் போன அடகு நகைகளுக்கு நஷ்டஈடு

(வவுனியா)

வவுனியாவில் கடந்த 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் நிகழ்ந்த கலவரத்தின் போது உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதற்காக கொண்டுவந்துவைக்கப்பட்டிருந்த காணாமல் போன நகைகளுக்கான நஷ்டஈடு ஒரு பவுணுக்கு 4600 ரூபா அதாவது ஒரு கிராமுக்கு 525 ரூபா வீதம் வழங்கப்படுகிறது என மக்கள் வங்கியின் வவுனியா கிளை முகாமையாளர் கே.தவராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடகு வைக்கப்பட்ட 207 பேரின் நகைகள் காணாமல் போயிருக்குமானால் அவர்களுக்கு நஷ்டஈடாக பணம் வழங்கப்படுகிறது என்றும்,

கடந்த புதன்கிழமை முதல் நகைஅடகு பிடிக்கும் வேலைகள் வவுனியா மக்கள் வங்கிக் கிளையில் ஆரம்பமாகியிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் 24-04-1992வரை அடகு நகைகளை மீளப் பெறுவதற்காக பணம் செலுத்தியவர்களுக்குரிய நகைகளை வவுனியா மக்கள்வங்கி கிளையில் வைத்து வரும் 15 ஆம் திகதிக்குப்பின்னர்மீளக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர்தெரிவித்தார்.

பதிவு செய்து கொள்ள லாம். (இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்.)

விண்ணப்பப் படிவங்களும் உரிய விபரங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வெளி நிலைப் பதிவு தேர்வு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ 1992 ஏப்ரல் 20 - ம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிறாப்பரிடம் 50 /- ரூபா செலுத்திய மைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் சுய முகவரியிட்டு ரூபா 12/- பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட 28 X 20 செ. மீ அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

1990 / 91 கல்வியாண்டிற்காக ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
12 - 05 - 1992

( சி / 4400 )

---

இவ்விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு வடபிராந்திய ஊழியர்களையும் தொழிற்சங்க பிரதிநிதிகளையும் 19-05-92 பனை' 20-05-92 முரசுமோட்டை அலுவலகங்களில் காலை 10.00 மணிக்கு ஒன்று கூடும்படி வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.


இதுவரை ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளாதவர்கட்கும் இச்சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

மாவட்ட முகாமையாளர்
வடமாகாணம்.

(இ/4402)

---

# 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
.................

தாயக விடிவில்
12-05-1985

## லெப். இளங்கோ
### இத்தூஸ்பிள்ளை மேரிதாஸன்
(லிங்கநகர் திருக்கோணமலை)

எங்கள் தயாக மண்ணிது
சிங்களவர் வந்து குடியேறவோ
பொங்கும் உணர்வுடனே
போராடப் புறப்பட்ட
எங்கள் தமிழ் மறவன்
ஏற்ற மிகும் இளங்கோ
செங்கள மாடிய வரலாறு வாழும்
சிங்களத்தை எதிர்க்கும் இனந்து.

(இ-4401) மனைவி, பிள்ளைகள், நண்பர்கள்.

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## மாவீரன் ஹீரோ அவர்கள்
(இராமகிருஷ்ணன் இதயராசா)

வீரப்பிறப்பு
10-10-1973

வீரச்சாவு
12-05-1991

மூவாறில் வீரனாகிக் களமாடினாய்
முனைப்புடன் சாவேந்திப் போராடினாய்
சாவாறி நடை ஓய்ந்து களைப்பாறவில்லை
காலத்தின் கொடுமுடி சிதைக்கத் தெருநடந்தாய்
வேலேறி நெஞ்சில் வடிந்த குருதி தெளித்தாய்
வவுனியாவின் நெடுத்த மரங்களிடையே படுத்தாய்
சாவில்லை உனக்கு சரித்திரமுண்டு உமக்கு
வீழ்வில்லை புலிக்கு வீரமுண்டு புலிக்கு
ஆறாத நினைவுகளை அனலேற்றி வைத்துள்ளோம்
தீராத துன்பங்களை தீர்க்கவென்றே ஆனவனே
உன்னை நினைக்கின்றோம், உள்ளம் உருகுகின்றோம்

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி,
[சி,4403]

இராமகிருஷ்ணன், கண்மணி
(பெருமாள்-இராசமணி)
குடும்பத்தினர், [நண்பர்கள்]

---

சந்திரன் - செம்மலை, மணலாறு)

2ஆம் லெப். வியாசன் (காராளசிங்கம் விக்கினேஸ்வரன் - பெரியகுளம், நெடுங்கேணி, மணலாறு)

2ஆம் லெப். செட்டி பெரியசாமி லோகேஸ்வரன் - 5 ஆம் கட்டை அளம்பில் மணலாறு)

பீலிஸ் (சுந்தரலிங்கம் சாந்தகுமார் - வற்றாப்பளை, முல்லைத்தீவு)

புஷ்பகாந் (ஐயாத்துரை சிவதர்சன் -யோகபுரம் மத்தி, குஞ்சுக்குளம், மல்லாவி, முல்லைத்தீவு)

2ஆம் லெப். ஜெனா (யோகநாதன் பிரான்சிஸ் - பள்ளிமுனை, மன்னார்)

2ஆம் லெப் அலோசியஸ் (அந்தையாரவிச்சந்திரன்- நாகதாழ்வு, மன்னார்)

ஈஸ்வரன் (பெருமாள் சசிக்குமார் - அடம்பன் மன்னார்)

தேவா (ஜஸ்ரின் செல்டன் - தலைமன்னார், மன்னார்)

வின்சன் (இராசரத்தினம் சுதாகரன் - பரந்தன், கிளிநொச்சி)

கப்ரன் வெங்கடேஷ் பாலசுப்பிரமணியம் மோகனதாஸ் - 'அம்பிகா வாசம்' வேம்படி ஒழுங்கை, வல்வெட்டித்துறை)

2ஆம் லெப். டியூட்சல் (சிவப்பிரகாசம் கிறேசியன் - பெரியமாவடி, சாவகச்சேரி)

2ஆம் லெப். மண்டேலா (தனபாலசிங்கம் (தமிழ்ச் செல்வன்) தமிழழகன் - மயில் வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை)

கிரோ (இராமகிருஷ்ணர் இதயராசா - நீர்வேலி வடக்கு)

லோகா (சென்பற்றியான் டேவிட் - அரியாலை)

அருள் (முருகையா செல்வச்சந்திரன்-நாவற்குழி)

மனோ (மருதங்கேணி, யாழ்ப்பாணம்)

சின்னமடுவில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்மீது தாக்குதலை நடாத்தி அழித்தபின்னர் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரச்சாவெய்திய
கப்ரன் சுந்தர் (அடைக்கலம் அமிர்தநாதன்-10ஆம் வட்டாரம், நெடுந்தீவு ஊர்காவல்துறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4399)

## சிந்தனைக்கு

மனிதன் விதியையே மாற்றி அமைக்கும் மகத்தான சாதனைகளாக வாழ்வில் உருவாகுபவை சிறிய விஷயங்களிலிருந்து தொடக்கம் பெற்றவையே

ராபர்ட் ஸ்மித்

ஈழநாதம்

81, ஐகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 12-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 35

# எச்சரிக்க வேண்டியது சிங்களவருக்கே

"சிறுபான்மையின் அபிலாசைகளையும் உரிமைகளையும் நிறைவேற்றாவிட்டால், நாடு துண்டாடப்படும் நிலைவரும்" இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அட்டாளைச்சேனையில் கல்விக் கல்லூரித்திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் இப் பேச்சு வடக்கு கிழக்குப் பிரச்சினையின் ஆழத்தை அவர் சரியாக உணர்ந்து கொண்டதன் நிமித்தம் பேசப்பட்டதா அல்லது வழமையான ஓர் அரசியல் பேச்சா என்பதை சரியாகக் கூறமுடியாவிட்டாலும், அவர் குறிப்பிட்டதே இன்றைய உண்மைநிலைவரமாகும் விடுதலைப்புலிகளும் அதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். நியாயமானதும் நிரந்தரமானதும் உறுதியானதுமான அரசியல் தீர்வொன்றை சிறிலங்கா அரசாங்கம் காண முற்படாவிட்டால் தனிநாடு பிரிவதைத்தடுக்க முடியாது என புலிகளின் அரசியல் ஆலோசகர் அண்மையில் பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டிருந்தார் மேலும் அவர் தனியரசு ஒன்றிற்கு வேண்டிய பொலிஸ் நீதி மற்றும் நிர்வாகத்துறைகளுக்கு அவசியமானதான ஸ்தாபன ரீதியிலான அமைப்புக்களை விடுதலைப் புலிகள் உருவாக்கியும் வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

அதாவது ஒரு புறத்தில் ஆயுதப் போர்முறையில் மண்ணை மீட்கப்புலிகள் போராடிவரும் அதேவேளை ஒரு அரசை அமைப்பதற்கான கட்டுமான வேலைகளிலும் விடுதலைப்புலிகள் ஈடுபட்டுள்ளனர். இவ் அடிப்படை வேலைகள் தனியரசை அமைப்பதற்கான ஓர் அடித்தளம் என்பதில் எவருக்கும் எந்தவித சந்தேகமும் இருக்கத் தேவையில்லை.

இந்நிலையில் சிறிலங்கா ஜனாதிபதி விடுத்துள்ள எச்சரிக்கையானது சரியானதே. ஆனால் இவ் எச்சரிக்கையை சிறிலங்கா ஜனாதிபதி விடுத்ததும் அது விடுக்கப்பட்ட இடமுமே பொருத்தமற்றதாகும்.

சிறிலங்கா ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்ட பலம் பொருந்தியவராவர். உலகில் உள்ள ஜனாதிபதி அமைப்புக் கொண்ட ஜனநாயக நாடுகளிலும் உள்ளதைவிட சிறிலங்கா ஜனாதிபதியிடமே அதிகாரம் குவிந்து கிடப்பதாக எதிரணியினர் குற்றம் சாட்டி வருகின்றனர். அது உண்மையும் கூட. இந் நிலையில் சிறிலங்கா ஜனாதிபதி இனப்பிரச்சினைத்தீர்விற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்காமல் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் நாடு பிரிந்து

# "இராணுவத்தினருக்கு உற்சாகமூட்ட அதிகாரிகளால் முடியவில்லை"

1992 ஏப்ரல் 28 இல் GREEN BELT THREE என்ற பெயரில் சிறிலங்கா இராணுவம் மன்னார் - மதவாச்சி றோட்டில் அடியெடுத்து வைத்த இராணுவ நடவடிக்கை மே 2 ஆம் திகதி முறியடிக்கப்பட்டது. புலிகள் வியூகம் வகுத்து சிறிலங்கா இராணுவம் முன்னேற முடியாமல் எதிர்பாராத தாக்குதலை மேற்கொண்டதால் நோக்கம் பலிக்காமல் இராணுவம் பின்வாங்கியது.

இந்த இராணுவ நடவடிக்கையைச் சிறிலங்காப் படைகள் தொடங்குவதற்கு முன்பே புலிகள் இந்த நடவடிக்கை பற்றி அறிந்திருந்தார்கள். அதனால் மன்னார் இராணுவ மட்டத்தில் அதிர்ச்சியையும், ஆளுமையில் பிளவையும் ஏற்படுத்தும் நோக்கத்தோடு தள்ளாடி இராணுவத் தளத்திலிருந்து மிக நெருக்கமாக 350 யார் அளவில் ஏப்ரல் 18 ஆம் திகதி கண்ணிவெடித் தாக்குதலைப் புலிகள் மேற்கொண்டனர். இதில் இழப்புகளைச் சந்தித்த சிறிலங்கா இராணுவத்தின் மனோதிடம் குறைந்தது. இதனால் கிறீன் பெல்ட் திறி நடவடிக்கையில் ஈடுபடவிருந்த இராணுவத்தின் அகநிலைக்கு வலியூட்ட இராணுவ உயர் அதிகாரிகளால் முடியவில்லை.


சிறிலங்கா இராணுவத்திற்கு எதிரான எதிர்ப்பு இயக்கம் மக்கள் மனதின் ஆழத்தில் ஓடிக் கொண்டிருந்தது. இராணுவத்திற்கு எதிர்ப்பை மக்களும் உருவாக்கிக் கொண்டனர். இதனால் போராளிகளும் மக்களும் ஒருகள். இராணுவத்தின் நோக்கத்தைச் சரியாக உணர்ந்து கொண்ட மக்கள் அதற்கேற்றபடி நடந்து கொண்டார்கள்.

> சிறிலங்கா இராணுவம் மன்னாரில் மேற்கொண்ட கிறீன் பெல்ட் திறி இராணுவ நடவடிக்கையை நிலைகுலைய வைத்துத் தோல்வியை ஏற்படுத்திய புலிகளின் தாக்குதல் பற்றி மன்னார் பிரதேச புலிப்படைத் தளபதி சுபன் எமது செய்தியாளரிடம் பேசிய தன் தொகுப்பு:

வரை ஒருவர் சார்ந்திருக்குமாறு செய்தது. இராணுவ நடவடிக்கையின் போது போராளிகளுக்கு வேண்டிய உலர் உணவு மற்றும் சாப்பாட்டு வகைகளை மக்களே வழங்கினார்கள். பல்வேறு குழுக்கள் - மாணவர்கள், பொதுமக்கள் - முதலுதவி, உணவு சேகரித்தல், பதுங்கு குழி அமைத்தல் போன்ற பல்வேறு தளங்களில் இயங்கினார்

1992 ஏப்ரல் 28 அன்று சிறிலங்கா இராணுவத்தின் ஒரு தொகுதி தள்ளாடியிலிருந்தும், மற்றொரு தொகுதி மாந்தையிலிருந்தும், மூன்றாவது தொகுதி வங்காலையிலிருந்தும் சிறுநாவற்குளம் - உயிலங்குளம் ஊடாக முருங்கனை முற்றுகையிட முயற்சித்தது. கனரக, சிறுரக வாகனங்கள், ஆயுதத் தளபாடங்களுடன் ஆயிரக்கணக்கில்மூன்று முனைகளிலும் இராணுவம் வேகமாக அழுத்தியது. முற்றிலும், இராணுவ ரீதியாகத் தொடங்கப்பட்ட இந்த கிறீன் பெல்ட் திறி நடவடிக்கையின் போது இராணுவம் மூன்று கவசவாகனங்களை இழந்தது. சுற்றில், வெம்மையும், மணற்பரப்புமான செம்மண்தீவு ஒரு பரிசோதனைக் களமாக மாறியது. சிறிலங்கா அணியின்மீது இவ்விடத்தில் வைத்து புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். கடுமையான தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத சிறிலங்கா இராணுவம் இழப்புகளுடன் இராணுவ நடவடிக்கையைக் கைவிட்டு உடனடியாகப்பின்வாங்கியது. பரந்த வெளியையும், மணற்பரப்பையும் வெற்றிகரமாகப் பயன்படுத்தலாம் என்பதற்கு ஒரு பரிசோதனைக் களமாக கிறீன் பெல்ட் திறி யுத்தம் அமைந்தது என்று இந்த முனையில் போரிட்ட புலிகள் குறிப்பிடுகின்றனர். இதில் விஷேசமென்னவென்றால் புலிகள் தரப்பில் இந்த யுத்தத்தின் போது உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.

கிராமவாசிகளைப் பொறுத்த வரை கருங்கண்டல், பரப்பாங்கண்டல், பாப்பாமோட்டை, ஆட்காட்டிவெளி,



வட்டக்கண்டல், நீலோசேனை ஆகிய வேளாண் கிராமங்களில் இராணுவ நடவடிக்கையின் போது வெளியேறிய விவசாயிகள் இராணுவம் பின்வாங்கிய கையுடன் மீளவும் குடியேறி தமது பொருளாதார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

### அமெரிக்கா இந்திய கூட்டுக்கடற்படை

# ஒத்திகையை ரத்துச்செய்க எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(டில்லி)

அமெரிக்க கடற்படையுடன் கூட்டுப்பயிற்சிகளை நடத்துவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளதற்கு புதுடில்லியிலுள்ள எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்தியாவின் இறைமையை வாஷிங்டனிடம் கையளிப்பதாக இருக்கின்றது என்றும் இத்திட்டத்தை உடனடியாகக் கைவிடுமாறும் அவை இந்திய அரசைக் கேட்டுள்ளன

உலக வங்கியிடமிருந்து கூடுதலான கடன் வசதிகளைப் பெறுவதற்காக வெள்ளை மாளிகைக்கு முகஸ்துதி பாடுவதனை கம்யூனிட் கட்சி எம். பி. யான குருதாஸ் தாஸ்ம்யூ குப்தா புதுடில்லியை குற்றஞ்சாட்டினார். இந்தியக் கடற்படையை அமெரிக்கக் கடற்படைக்குக் காட்டுவது நாட்டின் பாதுகாப்பு வளங்களுக்குப் பேராபத்தை உண்டு பண்ணும் என்றும் அவர் கூறினார் அத்துடன் இந்தியாவில் கடற்படைத் தளம் ஒன்றைப் பெறுவதற்கு அமெரிக்கா முயலுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ரஷ்யா இந்தியாவிற்கு இருபது கோடி டொலர்கள் பெறுமதியான றொக்கெட்டுகளை விற்க முன் வந்ததை வாஷிடன் எதிர்த்ததை முன்னிட்டு கூட்டுக்கடற்படைப் பயிற்சிகளை ரத்துச் செய்யுமாறு மத்திய எதிர்க்கட்சி உறுப்பினரானயஸ்வந் சிங் கோரினார்

சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதிலிருந்து இந்தியா அமெரிக்காவுடன் பாதுகாப்பு உறவுகளையும் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளையும் வைத்துக் கொள்வதற்கு இந்தியா முயலுகிறது சோவியத் யூனியனை இந்திரா தனது பலம் வாய்ந்த கம்யூனிஸ்ட் பங்காளியாகக் கருதியது.

## சமாதானத்தை வளர்க்கவே கூட்டுக் கடற்படை ஒத்திகை

- சரத்பவார்

(டில்லி)

அமெரிக்கக் கடற்படை

## சட்டமூலம் நிறைவேறியது

(சென்னை)

தமிழ்நாடு பொதுச்சொத்து

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# மேலும் 29 பேருக்கு தொண். ஆசிரியர் நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 4ஆம் திகதி முதல் மேலும் 29 பேருக்கு தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக மட்டு. நிருவாக உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சாம்பசிவம் தெரிவித்துள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களுக்கான ஏ. பி. பட்டியலில் இருந்து மேலும் நூறு பேருக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்று அதில் எழுபத்தியாறு பேரின்பட்டியல்அனுமதிக்காக வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் சாம்பசிவம் தெரிவித்தார்.

இதேவேளை வன்செயலால் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும்,

இதற்காக கடந்த வாரம் அங்கு நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு முந்நூறு பேர் அழைக்கப்பட்டிருந்த போதிலும் 275பேரே சமூகம் கொடுத்துள்ளனர் என்றும், இவர்களின் விபரம் அடங்கிய பட்டியல் வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவு ஊழியர்களுக்கு காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

சகலகூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கும், காப்புறுதித் திட்டம் விரிவாக்கப்படும் என்று

என்றும் தெரிவித்தார். நோய்வாய்ப்பட்டோ அல்லது விபத்தில் சிக்கியோ இருக்கும்போது இக்காப்புறுதித் திட்டம் அவர்

சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் நாடு பிரிந்துவிடும் என எச்சரிக்கை செய்வது வேடிக்கையாக உள்ளது.

மேலும் தமிழரின் அபிலாசைகளையும், உரிமைகளையும் நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ள சிறிலங்கா ஜனாதிபதி தலைமை தாங்கும் சிறிலங்கா அரசாங்கமோ அன்றி ஐக்கிய தேசியக் கட்சியோ இனப்பிரச்சினைத் தீர்விற்கான நிலைப்பாட்டில் தமிழ்மக்களின் அபிலாசைகளுக்குக் கிட்டவே வருவதாக இல்லை. தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவென கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு இரண்டரை வருடங்களின் பின் எதுவித முடிவுமின்றிக் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. தற்பொழுது உள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடமும் தமிழர் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இதேவேளை, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முன்னேற்றகரமான தீர்வுத் திட்டத்தை யாரும் முன்வைப்பதையும் அரசாங்கம் ஏற்பதாகவில்லை இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுத்துச்செல்ல வேண்டிய அரசாங்கமும், அதன் தலைவரும் மக்களைப் பார்த்து பிரச்சினை தீர்க்காவிட்டால் நாடு பிளவுபடும் எனத் தெரியப்படுத்துவது தமது பொறுப்பை மக்களிடம் சுமத்தி விடுவது போன்றதாகும்.

மேலும் இனப் பிரச்சினைத் தீர்விற்கு முட்டுக்கட்டையாக உள்ளவை சிங்கள பேரினவாத சக்திகளே. அமைச்சர் தொண்டமான் சற்று முற்போக்கான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தபோது பேரினவாத சக்திகள் தென்னிலங்கையில் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தன. வடக்கு – கிழக்கில் எவரும் அமைச்சர் தொண்டமான் தீர்வுத் திட்டத்தை எதிர்க்கவில்லை. இந்நிலையில். பிரச்சினை தீர்க்காவிட்டால் நாடு பிளவுபடுவது திண்ணம் என ஜனாதிபதி பிரேமதாசா எச்சரிக்கை செய்ய வேண்டியது சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளையே ஒழிய சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களையல்ல. பேரினவாத சக்திகளைத் திருப்திப்படுத்தாமல் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது எனக் கருதும் சிறிலங்கா ஜனாதிபதி பிரச்சினையை விளங்க வைக்க வேண்டியது அவர்களுக்கே ஒழிய மற்றவர்களுக்கு அல்ல.

இவற்றை நோக்கும்போது சிறிலங்கா ஜனாதிபதியின் செயல் பேச்சொன்று செயலொன்றாகவுள்ளது. மனமுண்டானால் இடமுண்டு என்பதுபோல் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட சிறிலங்கா ஜனாதிபதி சமாதானத் தீர்விற்கு விரும்பினால் ஏதோ ஒரு வகையில் பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம். ஆனால் பௌத்த பேரினவாதத்தின் செல்வாக்கு அல்லது அதிலுள்ள ஈடுபாடு தமிழர் தேசிய இனப்பிரச்சினையை சமாதான முறையில் தீர்த்து வைக்க இடைஞ்சலாகவுள்ளது. ஆனால், இதற்காகச் சிறிலங்கா ஜனாதிபதி எதிர்காலத்தில் வருந்த வேண்டி வரும்.

---

(டில்லி)

அமெரிக்கக் கடற்படை பற்றி இந்தியக் கடற்படை துருவியாராய்தலும், சமாதானத்தை வளர்ப்பதும் இக்கூட்டுப் பயிற்சிகளின் நோக்கமாகும் என்று இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சிகளின் கருத்துகளுக்குப் பதில் அளிக்குமுகமாக பாராளுமன்றத்தில் உரையாற்றிய சரத்பவார் இதனைத் தெரிவித்தார்.

வல்லரசுகளின் போட்டியிலிருந்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தை விடுவிப்பதற்காக 1960 ஆம் ஆண்டில் கூட்டுப் பயிற்சிகளில் கலந்து கொள்வதைப் புதுடில்லி நிறுத்திக் கொண்டது. கெடுபிடி யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதைத் தொடர்ந்து நிலைமை மாறியுள்ளது என்றும்,

முன்னைய கொள்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதால் எமது கடற்படை ஏனைய நாடுகளின் கடற்படையின் நன்மைகளை இழந்துவிடும் என்றும்,

– சரத்பவார்

உத்தேச இந்திய-அமெரிக்க கூட்டுக் கடற்படைப் பயிற்சிகள் ஏனைய நாடுகளை இலக்காகக் கொண்டு நடத்தும் நோக்கம் இல்லை. இந்தியா தனது கடற்படையின் திறமைகளை ஒளித்து வைத்திருக்க வேண்டியதில்லை எமது நீண்ட கரையோரப் பகுதியையும், கடல் வளங்களையும், தீவுப் பிராந்தியங்களையும், முக்கியமான கரைக்கப்பாலுள்ள நிலையங்களையும் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்என்றும் அவர் தெரிவித்தார்.

1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கும், நவம்பர் மாதத்திற்கும் இடையில் ஆஸ்திரேலியா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகளின் கடற்படைகளுடன் கூட்டாக நடத்திய கடற்படைப் பயிற்சிகளைப் போலவே இப்பயிற்சியும் இருக்கும் என்றும் சரத்பவார் தெரிவித்தார்.

தமிழ்நாடு பொதுச்சொத்து (சேதஇழப்பு தடுப்பு) சட்ட மூலம் கடந்தவாரம் சட்ட சபையில் நிறைவேறியது.

இச்சட்டமூலம் நிறைவேறிய போது சபையில் இருந்த பாட்டாளிமக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (வலது) இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதாதள் உறுப்பினர்கள் வெளிநடப்புச்செய்தனர்.

கட்சிகள் ஏற்பாடு செய்யும் ஊர்வலங்கள், கூட்டங்களின் போது பொதுச்சொத்துக்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களுக்கு அக்கட்சிகளிடம் இருந்தே நட்டஈட்டைப் பெறுவதற்கு வகை செய்வதே இச்சட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

## ராஜீவ் காந்தி

# சந்தேஷ் யாத்திரா டில்லியிலிருந்து ஆரம்பம்

(டில்லி)

ராஜீவ் காந்தியின் முதலாவது நினைவு நாளை குறிக்கும் வகையில் இளைஞர் காங்கிரஸ்(ஐ) சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ராஜீவ்காந்தி சந்தேஷ்யாத்திரா புதுடில்லியிலுள்ள அவரது சமாதியிலிருந்து சிறிபெரும்புதூர் வரையிலான பயணத்தைநேற்வறுக் காலை தொடங்கியது காங்கிரஸ் கட்சித்தலைவரும், பிரதமருமாகி பி. வி. நரசிம்மராவ் ராஜீவ் ஜோதியை ஏற்றி இளைஞர் காங்கிரஸ் தலைவர் ரமேஷ்செனித்தாவிடம் ஒப்படைத்தார். இந்த யாத்திரை 2800 கிலோ மீற்றர் பயணம் செய்து இந்த மாதம் 21ஆம் திகதி சிறிபரும் புதூரில் நிறைவேறும் என்றும் தெரிவிக்கபடுகிறது.

இந்த யாத்திரா ஹரியா, உத்தரபிரதேசம், மகராஸ்டிரா, ஆந்திரப்பிரதேசம் வழியாகச் சென்று 20ஆம் திகதி தமிழகத்திற்குச்செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈராக் புகார்

ஈராக்கின் பொருளாதாரத்தை சீர் குலைக்கும் வகையில் அமெரிக்கா திட்டமிட்டு செயல்படுவதாக பாக்தாத் குற்றம் சாட்டியுள்ளது. ஈராக் நாணயமான டினாரின் பெறுமதியைக் குறைக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டிருப்பதாக உத்தியோக பூர்வ ஈராக்செய்தித்தாபனம் கூறியுள்ளது.

## ரஷ்யாவில் சர்வசன வாக்கெடுப்பு

(மொஸ்கோ)

இவ்வாண்டு அக்டோபர் இறுதிக்குள் ரஷ்யா சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டுமா என்பது குறித்து நிர்ணயிக்கவே இந்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## குத்திக்கொலை

பிரபல ஹோட்டல் வர்த்தகரான நம்பிரெட்டியார் (55 வயது) கடந்த புதனன்றிரவு வெள்ளவத்தையிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

இரவு 9.30 மணியளவில் பிஸ்டல் மற்றும் கத்திகளுடன் வந்த மூன்று நபர்கள் அவரைச் கத்தியால் குத்திக் கொலைசெய்துள்ளனர்.

நம்பி ரெட்டியாரைக் காப்பாற்ற அவரது மகனும், மருமகனும் முயன்றபோது அவர்களும் கத்திக் குத்துக் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

டம் விரிவாக்கப்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கெத்தாராம விளையாட்டரங்கில் நடந்த கூட்டுறவாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கும் விரிவாக்கப்படும் இக்காப்புறுதித் திட்டம் அவர்களுக்கு பயன் தரத்தக்க வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர்சுட்டிக் காட்டினார்.

மேலும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் கூட்டுறவு அங்கத்தினர்களுக்கும் இத்திட்டம் படிப்படியாக விரிவாக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்

# தோட்டத் தொழிலாளர் சத்தியாக்கிரகம்

அப்புத்தளை தங்கமலை தோட்டத் தொழிலாளர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளனர் என இ தொ. கா பண்டாரவளை மாநில இபக்குனர் கணேச சபாபதி தெரிவித்துள்ளார்.

தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடியை எதிர்த்தே இந்த சத்தியாக்கிரகம் நடைபெறுகிறது என்றும்,

சத்தியாக்கிரகத்தில் சுமார் ஆயிரம் தொழிளாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும்,

தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடி காரணமாகக் கடந்த வியாழக்கிழமை சுமார் 65 பேருக்கு மேற்பட்டோர் வேலையில் இருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் இதனை ஆட்சேபித்தே இந்தச் சத்தியாக்கிரகம் நடைபெறுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 2 ஆம் லெப். மாவிக்கு மக்கள் அஞ்சலி

(கொடிகாமம்)

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வெடிவிபத்தில் வீரமரணமடைந்த 2 ஆம் லெப். மாவியின் (நாகலிங்கம் பகீரதன் மீசாலைதெற்குமீசாலை) புகழுடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இவரது புகழுடலுக்கு பெரும் திரளானமக்கள், மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். பின்பு சாவகச்சேரி பிரதேசப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இவ் அஞ்சலிக் கூட்டத்தில் தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. புரட்சி மற்றும் திரு சந்திரசேகரம் ஆசிரியர் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். பின்பு இவ் மாவீரருடைய புகழுடல் இராணுவ மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் துயிலும் இடத்தில் தகனம் செய்யப்பட்டது. (86)

## கடனுதவி

(கொழும்புத்துறை)

சுருட்டுத் தொழிலாளர் குடும்பங்களின் குடும்ப வருமானத்திற்கு உதவும் முகமாக வடபிராந்திய சுருட்டுத்தொழிலாளர் சங்கம் கால்நடை வளர்ப்பிற்கு. ஊக்கமளித்து வருகின்றது

இத்திட்டத்தின் கீழ் வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க அங்கத்தவர்கள் 163 பேருக்கு ஆயிரம் ரூபா வீதம் கால்நடைவளர்ப்பிற்கென மீளளிப்புக்கடனுதவி வழங்கப்பட்டுள்ளது இக்கடன் ஆறு மாத காலத்தவணையில் மீள அறவிடப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

# ஈழநாதம்

## பிரச்சினையை தீர்க்காவிட்டால் நாடு துண்டாடப்படும்

**- பிரேமதாசா**

(அட்டாளைச்சேனை)

சிறுபான்மையினரின் அபிலாசைகளையும் உரிமைகளையும் நிறைவேற்றாது விட்டால் நாடு துண்டாடப்படும் நிலை வரும் என்று அட்டாளைச்சேனையில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியின் திறப்புவிழாவைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் இன, மத குல பேதமற்ற முறையில் ஆட்சி நடத்துவேன் என்ற நம்பிக்கையிலேயே மக்கள் எனக்கு வாக்களித்து என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர். மக்கள் மட்டுமன்றி இந்நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் கட்சி வேறுபாடுகளை மறந்து எனது ஆட்சிக்கு ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். கடந்த மூன்று வருடகாலமாக மக்களினதும் அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்புடனேயே ஆட்சியை நடத்தி வருகின்றேன். கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் இருந்த அச்சம் பயம் நீங்கி மக்கள் இப்போது சுமுக நிலையில் வாழ்க்கை நடத்துகின்றார்கள் என்றும் அத்துடன்,

பெரும்பான்மை மக்களாகிய நாம் மிகவும் கஷ்டத்தில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களின் அபிலாசைகளையும், உரிமைகளையும் நல்குவதன் மூலமே அம்மக்களை நல்ல வழியில் வாழவைக்க முடியும் அதோடு இந்நாட்டின் பொருளாதார வளத்தையும் கட்டியெழுப்ப முடியும். சிறுபான்மை மக்களின் உரிமைகளையும் அபிலாசைகளையும் நிறைவேற்றாத பட்சத்தில் இந்நாடு துண்டாடப்படவேண்டிய இக்கட்டான நிலைவரும். ஒவ்வொரு சமயத்தைச் சேர்ந்த மக்களுக்கும், அவர்களுடைய பாரம்பரியங்கள் பழக்க வழக்கங்கள். வேறுபட்டாலும் ஒற்றுமையாக வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

## காங்கேசன் சென்ற லொறி விபத்துக்குள்ளாகியது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை இறங்குதுறையில் உள்ள களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றச்சென்ற லொறி ஒன்று விபத்துக்குள்ளாகி பலத்த சேதமடைந்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

உணவுப் பொருட்களை ஏற்றச்செல்லும்லொறிகளை இராணுவ காவலரணில் வைத்து இராணுவ சாரதிகள் பொறுப்பேற்பது தெரிந்ததே.

இவற்றை இராணுவம் பொறுப்பேற்றுக்கொண்டுசெல்லும்போதே மின்கம்பத்துடன் மோதியதாகவும் இந்த விபத்திற்கு தாமே பொறுப்பு என பலாலி சிறிலங்கா இராணுவ முகாம் அதிகாரி யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதுடன் அந்த லொறியைத் தாம் திருத்தவேலைகளை மேற்கொண்டபின் ஒப்படைப்பதாகவும் உறுதியளித்துள்ளார். (ச)

## எழுதுவினைஞர்களுக்கு நேற்று நேர்முகப் பரீட்சை

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோரின் அடிப்படைத் தகுதிகளைப் பரிசீலனை செய்யும் வேலை நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் மேற்படி அமைய எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கு 5000 ற்கு மேற்பட்டோர் விண்ணப்பித்ததும் அதில் மூவாயிரம் பேருடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இதில் மேற்படி பதவிக்காக போட்டிப் பரீட்சை மூலம் யாழ், மாவட்டத்தில் 304 பேர் தெரிவாகியிருந்தனர். இதில் முதல் 72 பேரும் நேற்று யாழ் செயலகத்திற்கு அழைக்கப்பட்டு அவர்களது அடிப்படைத் தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டன. நேற்றையதினம் சிலர் சமூகமளிக்கவில்லை என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. அடிப்படைத் தகுதி இருக்கும் பட்சத்தில் இவர்கள் தெரிவு செய்யப்படுவர் எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [ச]

## வெளிவாரிப்பரீட்சை விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு, முதல் கலைத் தேர்வு வர்த்தகத் தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான முடிவுத் திகதி யூன் 20எனவெளிவாரிப் பட்டப்படிப்பு இணைப்பாளர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய உதைபந்தாட்டப் போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆறு கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான இரண்டாவது சுற்றுப் போட்டியில் இன்றுபாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப் போட்டி நடைபெறவுள்ளது.

## முரசொலி ஆசிரியர் பொலிசாரால்கைது

(சென்னை)

முரசொலிப் பத்திரிகைஆசிரியர் எஸ், செல்வம் சட்டப் பேரவை உரிமை மீறலுக்காக நேற்று கைது செய்யப்பட்டு இரண்டரை மணி நேரத்தின் பின் விடுதலை செய்யப்பட்டார்.

சட்டப் பேரவை சட்டநடவடிக்கைக் குறிப்பு அறிக்கையிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை பிரசுரித்தமை காரணமாக ஆசிரியர் மீது உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டு அவர் உரிமைக் குழுவின் ஆணைப்படி மன்னிப்புக் கேட்காததால் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொளப்பட்டது.

நேற்று மாலை சுமார் 4 மணியளவில் முரசொலி ஆசிரியர் செல்வம் இவரது சென்னை இல்லத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்

அடுத்த பேரவைக் கூட்டத்தொடரில் முதல் நாளன்று தமிழ் நாடு சட்டப் பேரவையில் விசாரணைக் கூண்டில் ஆஜராவதாக எழுத்து மூலம் அவர் சபாநாயகருக்கு உறுதியளித்த பின்னரே விடுதலை செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலை செய்யப்பட்ட பின் செய்தியாளர் மத்தியில் பேசிய முரசொலி ஆசிரியர் தான் சட்டப் பேரவையில் ஆஜராகினாலும், உரிமை மீறல் குற்றச்சாட்டு குறித்து மன்னிப்புக் கோரப் போவதில்லை என்றார்.


இரண்டரை மணி நேரம் பேரவைச் செயலரின் அறையில் தான் வைக்கப்பட்டிருந்த சமயம், சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா முதலமைச்சருடன் ஆலோசனை கலந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## ஆசிரியர்கள் இடமாற்றம் மாணவர்கள் போராட்டம்

மட்டுவில் கமலாசனி மகா வித்தியாலய மாணவர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் ஆகியோர் இணைந்து ஆர்ப்பாட்ட மறியற்போராட்டமொன்றை அண்மையில் நடாத்தினார்கள்.

தென்மராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகத்தால் இப் பாடசாலையில் கடமைபுரிந்து வந்த ஆசிரியர்கள் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டதைக் கண்டித்தே இம் மறியற்போராட்டம் இடம்பெற்றது.

தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் திரு கந்தண்ணா மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு சிட்புர தமிழீழகாவற்றுறையினர் ஆகியோர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்திருந்தனர். கல்வித்திணைக்களத்திற்கு எதிரான கோஷங்களும் இங்கு எழுப்பப்பட்டன இறுதியில் தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளரினால் இவ் இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்பே இம் மறியல் போராட்டம் கைவிடப்பட்டது. இதே போல மிருசுவில்அரசினர் கலவன் பாடசாலையிலும் உள்ளூர் ஆசிரிய இடமாற்றத்தை எதிர்த்து மறியற்போராட்டம் நடாத்தப்பட்டு வருவதுதெரிந்ததே. [35]



## 2 ஆம்லெப். மாவி

கடந்த ஒன்பதாம் திகதி இடம் பெற்ற வெடி விபத்தில் 2ம் லெப்டினன்ட் மாவி (நாகலிங்கம் பகீரதன் மீசாலை தெற்கு) என்றபோராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சிறந்த முடிவுகள்

தென்மராட்சி முன்னணிப் பாடசாலைகளில் நேற்று முன்தினம் வெளியான க. பொ. த. (சா/த) விசேட பரீட்சை முடிவுகள் வருமாறு.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் 7D ஒருவர், 6D ஒருவர், 4D இருவர், சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் 6D ஒன்பதுபேர், 5D ஏழுபேர், 4D 13பேர், சாவகச்சேரி மகளிர் கல்லூரி 7D ஒருவர், 5D ஒருவர், 4D இருவர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து இப்பரீட்சையில் தோற்றியோரில் 75 வீதமானோர் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் சிறுபான்மைதான்; பிராந்தியத்தில் வலிமையானவர்கள்

### தமிழர் குறித்து தொண்டமான்

(கொழும்பு)

இலங்கையைப் பொறுத்த வரை தமிழ் மக்கள் சிறுபான்மையினராக இருக்கலாம், ஆனால் பிராந்திய ரீதியில் பார்த்தால் எமது வலிமை எத்தகையது என்பது புரியும் என்று கிராமியக் கைத்தொழில் துறை அமைச்சர் எஸ். தொண்டமான் கூறினார். கொழும்பில் நடைபெறும் சாகித்திய விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டுபேசிய அவர் மேலும் கூறுகையில் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் எல்லாம் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். அங்குள்ள தமிழ் மக்களோடு இணைந்து நாம் தமிழ்மொழியையும்கலாசாரத்தையும் வளர்க்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

## தீர்வை

மூலம் பாராளுமன்ற தெரிவுக் குழுவில் தான் நம்பிக்கையிழந்து விட்டதாக கூறவில்லை என்று தெரிவித்த அவர் பாராளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர் என்றமுறையில் அந்த குழு மூலம் தீர்வொன்றை எட்ட முடியும் என்ற நம்பிக்கை இன்னமும் இருப்பதாகவும் தெரிவித்தார்.

## ஆயருக்கு

பட்டார்.

அங்கு யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் மாணவிகள் இறைவணக்க வரவேற்பு நடனத்தின் மூலம் ஆண்டகையை வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து அருட் திரு. றெஜி ராஜேஸ்வரன் உட்பட யாழ்ப்பாணம் இளவாலை, மானிப்பாய், தீவுப்பகுதி, கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைவட்டாரப் பிரதிநிதிகளும் ஆயருக்கு மாலையிட்டனர்.

## இராணுவ வட்டாரங்கள் ஊர்ஜிதம்

அதிகாலை நேரத்தில் விடுதலைப் புலிகள் ஆனையிறவு இராணுவ முகாமின் காவலரண்களின் மீது தாக்குதல்கள் நடத்தியதை கொழும்பில் கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

## கொழும்பு பல்கலைக்கழகம் நேற்று மூடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது. மாணவர் அமைதியின்மை காரணமாக பல்கலைக்கழகத்தை தொடர்ந்து நடாத்த முடியாமல் உள்ளதாக அதன் உபவேந்தர் ஜி.எம். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பல்கலைக் கழக வளவிற்குள் நேற்று மாலை முதல் மாணவர்கள் செல்வதற்குத் தடைவிதிக்கப்படுவதாகவும் விடுதி மாணவர்கள் இன்று மாலைக்குள் வெளியேற வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளனர்.

வட-கிழக்கு உள்ளூராட்சி நிறுவனங்கள்

## வெளிநாட்டிலிருந்து ஆயுதம் பெற

# வெளிநாட்டிலிருந்து ஆயுதம் பெற வழிவகுக்கக் கூடாது

## - விஜேமுனி சொய்ஸா

(கொழும்பு)

''வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ள உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கும் போது எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் வடக்கு கிழக்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆயுதங்கள் போன்றவற்றை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ள நாம் வழி வகுத்து விடக்கூடாது'' என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி விஜேமுனி சொய்சா கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான பிரேரணை மீது அவர் பேசினர். தொடர்ந்து பேசிய அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு - கிழக்கு எமது தேசப்படத்தில் இன்னமும் உள்ளது. வடக்கையும் - கிழக்கையும் நாம் பிரித்து விடவில்லை. ஆகவே நாம் எடுக்கும் நடவடிக்கைகள் வடக்கு-கிழக்கு உட்பட முழு நாட்டுக்கும் பொருந்துபவையாகும்

வடக்கு - கிழக்கிலும் உள்ளூராட்சி நிறுவனங்கள் இயங்குவது முக்கியம் உள்ளூராட்சி நிறுவனங்கள் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற பிரேரணை முக்கியமானது

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் வெளிநாட்டு உதவி வசதிகளைப் பயன்படுத்தி ஆயுதம் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள நாம் இடமளித்துவிடக் கூடாதுஎன்றும்குறிப்பிட்டார்

## மரண அறிவித்தல்

### திரு. மாணிக்கம் குணராசா

தம்பலகமத்தைப் பிறப்பிடமாகவும், துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. மாணிக்கம் குணராசா காலமாகிவிட்டார். அன்னார், அல்வாய் வடக்கு காட்டுப் புலத்தைச் சேர்ந்த திருமதி சிவரத்தினத்தின் அன்புக் கணவரும், செல்வி. நிவேதினியின் அன்புத் தந்தையும், திருமதி ந நாகரத்தினம் சிவனொலிபாதம் டாக்டர் தேவராசா, திருமதி வ இரத்தினபாக்கியம் (வற்றாப்பளை) தர்மராசா, இரத்தினராசா ஆகியோரின் மைத்துனரும் ஜெயராசா, சந்திரபுஷ்பம், யோகதாஸ் (சுவிஸ்) செல்வி உதயா ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள், துன்னாலையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் 12-05-1992 பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:

துன்னாலை வடக்கு, திருமதிசிவரத்தினம்

துன்னாலை. மனைவி

(2565)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஹாட்லியில் 96 சதவீதம் சித்தி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இருந்து விசேட (க. பொ த. (சா, த.) பரீட்சைக்குத் தோற்றிய 6 மாணவர்கள் 7 பாடங்களில் 'டி' தரச் சித்தியும் 11 மாணவர்கள் 6 பாடங்களில் 'டி' தர சித்தியும் 10 மாணவர்கள் 5 பாடங்களில் 'டி' தர சித்திகளையும்பெற்றுள்ளனர். இக்கல்லூரியில் இருந்து தோற்றிய 96%மான மாணவர்கள் .க பொ. த. (உயர்தரம்) வகுப்பிற்குத் தகுதிபெற்றுள்ளனர்.

### தலைவர்

எழுச்சிவிழாவாகவும்முத்தமிழ் விழாவின் முன்னோடி விழாவாகவும் இனிது நடாத்திய விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்திற்கும் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கும் நன்றி என தெரிவிக்கப் பட்டுள்ளது.

ளமும் இருப்பதாகவும் தெரிவித்தார்.

### இந்தியா

அமைப்பான ''றோ''வும் இந்தியாவின் கூட்டுப் புலனாய்வுக் கமிட்டியும் கொண்டிருப்பதாக டில்லியில் இருந்து வெளிவரும் இண்டிப்பெண்டன் பத்திரிகை கூறுகின்றது

'விடுதலைப் புலிகளைத் தடை செய்வது சம்பந்தமாக இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் ஒரு முடிவு எடுக்கவுள்ளார். ஆயினும் இத்தகைய முடிவால் ஏற்படக்கூடிய பாரதூரமான அரசியல்விளைவுகள் பற்றி அரசு சிந்திக்கவேண்டும் என பிரதமரின் ஆலோசகர்கள் யாசனை தெரிவித்துள்ளார்கள். ஆனால் இந்தத் தடையைஎப்படி நடைமுறைப் படுத்துவது என்பது ஒருபெரிய கேள்விக்குறியாக எழுந்துள்ளது நாட்டிற்கு வெளியில் இயங்கும் ஒரு அமைப்பைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் எவ்விதம் தடைசெய்வது என்பது பற்றி சட்டத் துறை அமைச்சிற்குக் கூடப் புரியவில்லை.

இலங்கையின் வடபகுதியில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி வரும் புலிகளைத் தடை செய்வதால் இந்தியாவிற்குரிய பிடிகள் முற்றாகத் துண்டிக்கப்படும் என வாதாடும் 'றோ'பாக்கிஸ்தான், பங்களாதேஷ், சிறிலங்கா ஆகியவற்றுக் கிடையிலான உறவு இந்தியாவை தென்னாசியாவில் தனிமைப்படுத்தி விடும். புலிகளைத் தடைசெய்வதனால் இந்தியாவிற்கு உடனடி நன்மைகள் இருந்தாலும், நீண்ட காலத்தில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என இந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால் அதேவேளை உள்துறை அமைச்சும், உள்நாட்டுப் புலனாய்வு நிறுவனமும் புலிகளைத் தடைசெய்வதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன என்று இப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மறைவட்டாரப் பிரதிநிதிகளும் ஆயருக்கு மாலையிட்டனர். அடுத்து அருட்திரு எஸ். ஏ. மைக்கல் சாமியின் தலைமையுரையுடன் மேடை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

யாழ். பேராலய மைதானத்தின் அனைத்துப் பகுதிகளும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் பணியிலும் வீதிஒழுங்குகளைக் கவனிப்பதிலும் தமிழீழக் காவல்துறையினரும் சாரணர் இயக்கத்தினரும் ஈடுபட்டிருந்தனர்.

யாழ் மறைவட்ட பொதுநிலையினர் கழகச் சார்பில் ஆசிரியர் சூசைநாயகமும் கத்தோலிக்க ஆயர் அவைத் தலைவர், மன்னார் மறைவட்ட குருமுதல்வர், யாழ். மறைவட்ட துறவிகள் சார்பில் அருட்செல்வி மேரியுடெக்ஸி மேதகு ஆயர் கலாநிதி டீ. ஜே. அம்பலவாணர், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரியஸ்வாமிகள். யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ துரைராசா, யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர், தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த திரு யோகரெத்தினம் யோகி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதனை அடுத்து பிரதம ஆசிரியர் அருட்திரு பிரான்சிஸ் யோசவ் அவர்களால் விழாச் சிறப்புமலர் வெளியிடப்பட்டது இறுதியாக யாழ் மறைவட்ட குருக்கள் குழுத்தலைவர் அருட்திரு அன்ரன் இராஜநாயகம் அவர்களின் நன்றியுரையைத் தொடர்ந்து திருமறைக் கலா மன்றத்தினரின் கலை நிகழ்ச்சியுடன் முப்பெரும்விழா இனிதே நிறைவுற்றது. (க, ச, 21)

### புலிகலின்

கைகளை கட்டுப்படுத்துதல் வேண்டும்என்று இந்தியமத்திய அமைச்சர் எம்.எம். ஜேக்கப் கூறியுள்ளார்.

ளதாக அதன் உபவேந்தர் ஜி.எம். பீரிஸ் தெரிவித்துள்

வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளனர்.

## கொழும்பு - நீர்கொழும்பு பகுதியில்

# புலிகளின் நடமாட்டம் அறிய இரு துப்பறியும் பிரிவுகள்

(கொழும்பு)

நீர்கொழும்புப் பொலிசும் களனிப் பொலிசும் இணைந்து இரு துப்பறியும் பிரிவுகளை உருவாக்கியுள்ளன. நீர்கொழும்புப் பகுதியில் புலிகளின் நடமாட்டம் இருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகிப்பதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

ஒவ்வொரு துப்பறிவுப் பிரிவுடனும் நடவடிக்கைக் குழுக்களும் சேர்ந்து இயங்குகின்றன. களனித் துப்பறியும் பிரிவு நீர்கொழும்பிலும் நீர்கொழும்புப் பிரிவு களனியிலும் செயற்படுகின்றன.

சினிமாத் தியேட்டர்கள், மதுபானக் கடைகள் மற்றும் சனநடமாட்டமான இடங்களில் தமிழர்களின் நடமாட்டம் சாதாரண உடையில் துப்பறியும் பொலிசாரால் அவதானிக்கப் படுகிறது சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடும் தமிழர்கள் பற்றிய தகவல் நடவடிக்கைக் குழுவுக்குத் தெரிவிக்கப் படுகிறது நடவடிக்கைக் குழு உடனடியாகச் செயற்படுகிறது.

நீர்கொழும்பில் தமிழர் இப்போது அதிகமாக வசிப்பதால் புலிகள் ஆயுதங்களைப் பதுக்குவதற்கும், புலிகளின் நடமாட்டத்துக்கும் நீர்கொழும்பு தகுந்த இடம் என்று பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது.

நீர்கொழும்புக்கு அருகில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டுநாயக்கா விமான நிலையம் மற்றும் கொழும்பு நகரமும் அதிக தூரத்தில் இல்லாததால் புலிகள் நீர் கொழும்பைத் தெரிந்தெடுத்திருக்கிறார்களாம்.

சிலாபம், புத்தளம் வழியாக யாழ்ப்பாணம் போவது இலகுவானதால் யாழ்ப்பாணம் போகும் வழியில் அமைந்திருக்கும் நீர்கொழும்பில் புலிகளின் நடமாட்டம் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

அண்மையில் சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞர்கள் நீர்கொழும்பில் கைது செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### மக்களுக்கு

எடுத்துக் காட்டுவதில் யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்கள் பெரும் பங்கு வகித்தவர்.

இந்தியசிறிலங்காராணுவத்தினரது தாக்குதல்களால் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அழிவுகளையும், கொடுமைகளையும் உலக அரங்கில் அம்பலப்படுத்தியதுடன் இவ்வாறான கொடூரத்தனத்திற்கு மத்தியிலும் சொந்த மண்ணில் உறுதியுடன் நின்று இந்த வாழும மக்களுக்கு நம்பிக்கையூட்டியிருக்கிறார் என்றும் இதன் மூலம் இந்த மண்ணில் நடைபெறும் உரிமைப் போராட்டத்திற்கு உறுதியும் உத்வேகமும் ஊட்டியிருக்கிறார் என்றும்கூறினார்.

யாழ் அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் இவ் விழாவில் கலந்துகொண்டு பேசும்போது யாழ் மக்கள் பாதுகாப்பின்மையால் அல்லலுற்ற சமயம் ஆத்மபலத்துடன் தனித்து நின்று யாழ். மக்களுக்கு வழிகாட்டியவர் என்றார்.

இறுதியில் விழாநாயகர் மேதகு யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்கள் நன்றி கூறி உரைநிகழ்த்தினார்.

(க) (ச) (21)